**13.03.2023**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்

OS.58/2021

**வ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கட்ராமன் | சாதி | |
| த/பெ | சந்தானகிருஷ்ணன் | மதம் | |
| கிராமம் | காரைக்கால் நகரம், | தொழில் | |
| தாலுக்கா | | வயது | 59/2023 |
| மாவட்டம் | புதுச்சேரி | தேதி | |

இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதியின் கணவர் ஆவேன். அவரது பவர் ஏஜென்டாகவும் இருக்கிறேன். இவ்வழக்கு சங்கதிகள் எனக்கு நேரிடையாக தெரியும். நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன், நான் சொன்ன விபரம் அடிப்படையில் 'நிரூபணவாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. நான் படித்துபார்த்தேன் விபரம் சரியாக உள்ளது. கையொப்பம் போட்டேன். 10.5.2019 தேதியிட்ட ஞானாம்பிகை என்பவர் அரிதாஸ் என்பவருக்கு எழுதிக்கொடுத்த ஜெனரல்அட்டார்னி பவர் பத்திரம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன. வாசாஆ.1, 13'.6.2013 தேதியிட்ட அரிதாஸ் ஞானாம்பிகையின் பவர்ஏஜென்ட் என்ற முறையில் குணசேகரன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சாஆ.2. 29.5.2019தேதியிட்ட அரிதாஸ் ஞானாம்பிகையின் பவர்ஏஜென்ட் என்ற முறையில் மோகனாதேவி என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட இணையதள நகல் வா.சா.ஆ.3. 11.7.2019 தேதியிட்ட அரிதாஸ் ஞானாம்பிகையின் பவர்ஏஜென்ட் என்ற முறையில் பாலமுருகனுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட இணையதள நகல் வாசா.ஆ.4. 3.6.2020 தேதியிட்ட ரவி என்பவர் பாலமுருகன்

என்பவருக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட இணையதள நகல் வா,சா.ஆ.5, 02.1.2020 தேதியிட்ட ரவி என்பவர் கோலியனூர் ஊராட்சி ஒன்றிய வட்டாரவளர்ச்சி அலுவலருக்கு எழுதிக் கொடுத்த நன்கொடை ஆவணம் கிரையபத்திரம் சான்றிட்ட இணையதள நகல் வா,சா.ஆ.6, 7.12.2020 தேதியிட்ட வாதி அவரது வழக்கறிஞர் மூலும் அனுப்பிய அறிவிப்பு நகல் வாசா.ஆ.7, 7.12.2020 தேதியிட்ட வாதி விழுப்புரம் வட்டாட்சியருக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் வாசா.ஆ.8, 3.2.2021 தேதியிட்ட வாதி பதிவு துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் மற்றும் பலருக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் வாசா.ஆ.9. ஞானாம்பிகை பெயரிலான தாவா சொத்துக்களுக்குரிய பட்டா எண்.46, 431, 495, 496, 497, 804 கொண்ட கணினி பட்டா நகல்கள் ( 6 எண்ணிக்கை முறையில் வா.சாஆ.10) பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக** ஒத்தி வைக்கப்படுகிறது.